தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் கூட்டமைப்பின் அறக்கட்டளை

# சமூக சேவை சுடர்

## (மாற்றுத்திறன் மக்களின் குரல்)


**சமூக சேவை சுடர்**

**திறன் - 11 இதழ் - 10 ஆகஸ்ட் - 2022**

பதிப்பாசிரியர் & ஆசிரியர்
**Dr. P. சிம்மசந்திரன்**

இணை ஆசிரியர்
**பேராசிரியர் முனைவர்**
**த. பொன்னுசாமி**

உதவி ஆசிரியர்கள்
**Dr. B. சந்திரக்குமார்**

செய்தியாளர்
**திரு. T. கருப்பையா**

புகைப்பட கலைஞர்
**திரு. M.G. ராகுல்**

தொகுப்பாளர்
**V.செல்வி**

**மாவட்ட செய்தியாளர்கள்**

சென்னை
**திரு. M. கண்ணன்**

ஈரோடு
**திரு. S. துரைராஜ்**
**திரு. R. நவநீதகிருஷ்ணன்**

மதுரை
**திரு. S. பூபதி**
**செல்வி. M. காமாட்சி**
**திருமதி. R. மோகனப்ரியா**

கோவை
**திரு. A. கன்னியப்பன்**

நாமக்கல்
**திரு. A. பழனிவேல்**

கடலூர்
**திரு. C. குமார்**


**பொருளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் பக்கம் | 4 |
| 2. | 2016 ஆம் ஆண்டின் ஊனமுற்றோருக்கான உரிமைச் சட்டம் | 5 |
| 3. | மாவட்ட செய்திகள் | 6 |
| 4. | விளையாட்டு செய்தி | 8 |
| 5. | வேலைவாய்ப்பு செய்திகள் | 10 |
| 6. | கவிதை | 13 |
| 7. | பிற பத்திரிகை செய்தி | 13 |
| 8. | அரசாணைகள் | 22 |
| 9. | மருத்துவ செய்தி | 30 |



Head Office :

**Tamil Nadu Differently Abled Federation Charitable Trust**

No.10, 4th Cross Street, Balaji Nagar, Ekkaduthangal
Chennai - 600 032. Phone : 044 22251584
E-mail : tndfctrust@gmail.com / sasesudar@gmail.com
Website : www.tndfctrust.com



ஆசிரியர் பகுதி

## அன்புடைய சமூக சேவைச்சுடர் வாசகர்களுக்கு வணக்கம்,

மாதந்தோறும் வெளிவரும் செய்திகளைப் படித்துப் பார்த்து நிறை குறைகளை எழுதி அனுப்பியுள்ளீர்கள். அதற்கு முதற்கண் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மிக சிறப்பாக உலக செஸ் சாம்பியன் ஷிப் போட்டி இந்தியாவில் தமிழகத்தில் இப்போட்டி நடந்தது பெருமைக்குரியதாகும். தமிழ் மண்ணிற்கும், தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்தது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்களும் வெற்றிபெற்று இருப்பது வாழ்த்துக்குரியதாகும். இதை ஏற்று நடத்திய தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல் மாற்றுத்திறனாளிகளுக்கான செஸ் போட்டியும் நடத்துவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும்.

ஆகஸ்ட் 15, 2022, 75-வது சுதந்திர தினம் மிக விமரிசையாக அரசும் பொதுமக்களும் இணைந்து மிக சிறப்பாக கொண்டாடினார்கள். ஆனால் அனைவருக்கும் 75-வது சுதந்திர நாளில் சுதந்திரம் கிடைத்து விட்டதா? என்றால் இந்திய திருநாட்டை ஆள்பவரும், மாநிலங்களை ஆள்பவரும் முழுமையாக மக்கள் மீது அதுவும், ஒதுக்கப்பட்ட மக்களாகிய மாற்றுத்திறனாளி மக்கள் மீது அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். உலகளவில் ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கு 10 சதவீதம் கூட மாற்றுத்திறனாளிகளுக்கான வளர்ச்சி பெற்றிருக்கிறதா என்று பார்த்தால், குறைவுதான் எப்போது இந்த அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு 100-வது சுதந்திர தினத்துக்குள்ளாவது மற்ற நாடுகளுக்கு இணையாக அனைத்தும் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் இந்த சுதந்திர தின விழாவை தமிழ்நாட்டில் கொண்டாடினார்கள்.

இந்தாண்டு சுதந்திர தினவிழாவில் தமிழக முதல்வரால் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த பணியாற்றிய பல பிரிவு கொண்ட மக்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் ஒதுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும் மகத்தான தலைவரும் 98 வயதை கடந்திருந்தாலும் இன்னும் அயராது மக்களுக்கு உழைத்து கொண்டிருக்கும் ஐயா திரு.நல்லக்கண்ணு அவர்களுக்கு "தகைசால் தமிழர் விருது' ரொக்கம் ரூ.10 இலட்சமும் வழங்கி தமிழக முதல்வர் கௌரவித்தனர். இருந்தபோதும், அதேமேடையில் தனக்கு விருது மட்டும் போதும் ரொக்க பணத்தோடு சேர்த்து கூடுதலாக 5000 இணைத்து 10,500,000 ரூபாய் இணைத்து மீண்டும் மக்களுக்காக பயன்படுத்த வேண்டுமென்று முதல்வர் நிதிக்காக கொடுத்த மகத்தான தலைவருக்கு தமிழகத்தில் வாழ்கின்ற ஒட்டு மொத்த மாற்றுத்திறனாளி மக்களும் இருதரம் கூப்பி வணங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் கூட்டமைப்பின் அறக்கட்டளையும், ஸ்ரீ கீதாபவன் அறக்கட்டளையும் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கு 11-ஆம் ஆண்டு சுயம்வரங்கள் நடத்தப்பட்டு திருமணம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் சுயம்வரம் நடந்து கொண்டுள்ளது. சென்னையில் 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சுயம்வரம் நடத்த உள்ளது மருத்துவ கவுன்சிலிங் 09.10.2022 அன்றும் திருமணம் 20.11.2022 அன்றும் தேர்வு செய்யும் தம்பதியர்களுக்கு இதை மாற்றுத்திறனாளி சமூகம், ஏழை எளிய சமூகம், ஆதரவற்றோர் சமூகம், விதவைகள் சமூகம் இதைப் பயன்படுத்திக் கொண்டு திருமண வாழ்க்கை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது.

தமிழகம் முழுவதும் நிறைய நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்க

வந்த வண்ணம் உள்ளனர் ஆதலால் இந்த செய்தியை படிக்கும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கோ அல்லது தாங்களை சார்ந்த மாற்றுத்திறனாளி நண்பர்களுக்கோ இச்செய்தியை கூறி www.tndfctrust.com என்ற இணையதளத்தில் வேலைவாய்ப்புக்கான விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்தோ, அல்லது ஆன்லைன் மூலமாகவோ அனுப்பி வைக்கவும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்கள் tndfcemployment@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சமூக சேவைச் சுடர் வாசகர்கள் தங்களுடைய இந்தாண்டுக்கான சந்தா முடிவடைந்திருந்தால் உடனடியாக புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சமூக சேவைச்சுடர் வளர்ச்சிக்காக உதவ முன் வருவோர் விளம்பரமாகவோ, நன்கொடையாகவோ வழங்க விரும்பினால் சமூக சேவைச்சுடர் என்ற பெயரில் காசோலையாகவோ, வரைவோலையாகவோ அனுப்பலாம். மேலும், ஆன்லைன் மூலம் அனுப்புவோர் கீழே உள்ள வங்கி கணக்கிற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| **Account Name** | : | **SAMUGA SEVAI SUDAR** |
| **Account Number** | : | **6423318340** |
| **Bank Name** | : | **INDIAN Bank** |
| **Branch** | : | **EKKADUTHANGAL** |
| **IFSC Code** | : | **IDIB000E039** |


**Dr. P. சிம்மசந்திரன்**
ஆசிரியர் மற்றும் பதிப்பாசிரியர்
044 - 2225 1584


# 2016 ஆம் ஆண்டின் ஊனமுற்றோருக்கான உரிமை சட்டம்

## அத்தியாயம் VIII

## ஊனத்தன்மைக்கான மத்திய ஆலோசனை வாரியம் (Central Advisory Board on Disability)

**23. தலைமை அதிகாரி (Presiding Officer):**

மத்திய ஆலோசனை வாரியத்தின் ஒவ்வொருகூட்டத்திற்கும் தலைவர் தலைமை வகிப்பார் மற்றும் தலைவர் இல்லாத பட்சத்தில் துணைத் தலைவர் தலைமை வகிப்பார். ஆனால் தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய இருவரும் இல்லாதபட்சத்தில் வருகை புரிந்திருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை ஏற்க உறுப்பினர்களில் ஒரு நபரைத் தேர்வு செய்ய வேண்டும்.

**24. குறைவெண் வரம்பு (Quorum):.**

1. மத்திய ஆலோசனை வாரிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எந்த ஒரு கூட்டத்திற்கும் குறைவெண் வரம்பாகக் கருதப்படும்.
2. ஒரு கூட்டத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அல்லது ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், வருகை எண்ணிக்கை, மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவாக இருந்தால் தலைவர் அந்த கூட்டத்தை சில மணி நேரங்கள் அல்லது எதிர்காலத்தில் பிறிதொரு தேதியில் கூட்டத்தை ஒத்திவைக்கலாம்.
3. ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்கு எந்த ஒரு குறைவெண் வரம்பும் அவசியமில்லை.
4. சாதாரண அல்லது சிறப்பு கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறாத எந்தவொரு விவகாரமும், ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்படக் கூடாது.

**25. கூட்டக்குறிப்பு (Minutes):**

1. உறுப்பினர் செயலர் கூட்டத்தில் வருகை புரிந்த உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்ட பதிவினையும் மற்றும் அக்கூட்டத்தில் நடவடிக்கைகளையும் அந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும்.

2. முந்தைய கூட்டத்தின் கூட்டக்குறிப்பு அடுத்து வரும் கூட்டத்துவக்கத்தில் வாசிக்கப்படும். அந்த கூட்டத்தில் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டு தலைமை அதிகாரியால் கையெழுத்திடப்பட வேண்டும்.

3. அலுவலக நேரங்களில் உறுப்பினர் செயலர்அலுவலகத்தில் எந்தவொரு உறுப்பினராலும் கூட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்படலாம்.

**26. கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்படவுள்ள நடவடிக்கைகள் (Business to be transacted at meeting):**

தலைமை ஏற்று நடத்தும் அதிகாரியின் அனுமதியிருந்தால் தவிர, நிகழ்ச்சி நிரலில் இல்லாத அல்லது விதி 22ன் துணைவிதி (5)ன்படி உறுப்பினரால் அறிவிப்பு கொடுக்கப்படாத எந்தவொரு பொருள் பற்றியும் எந்த ஒரு கூட்டத்திலும் பரிவர்த்தனை செய்யப்படக் கூடாது.

**27. மத்திய ஆலோசனை வாரியக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் (Agenda for the meeting of the Central advisory Board):**

1. தலைமை அதிகாரியின் அனுமதியின் பேரில் கூட்டத்தில் வேறுவிதமாக தீர்மானிக்கப் பட்டாலன்றி நிகழ்ச்சி நிரலில் உள்ள வரிசைப்படி கூட்ட நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

2. கூட்டத்தின் தொடக்கத்தில் அல்லது கூட்டத்தின் போது விவாத முடிவிற்குப்பின் தலைமை அதிகாரி அல்லது ஒரு உறுப்பினர் நிகழ்ச்சி நிரலில் உள்ள வரிசையில் மாற்றத்தை பரிந்துரைக்கலாம் மற்றும் தலைவர் ஒப்புக்கொண்டால் அத்தகைய மாற்றம் இடம் பெறலாம்.

**28. பெரும்பான்மை முடிவு (Decision by majority):**

குழுக்கூட்டத்தில் கேட்கப்படும் எல்லா கேள்விகளுக்கும் வருகை புரிந்திருக்கும்உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் வாக்குகளின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் மற்றும் வாக்குகள் சமமாக இருந்தால் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தலைவர் அல்லது தலைவர் இல்லாத பட்சத்தில் துணைத்தலைவர் அல்லது இரு தலைவர்களும் இல்லாத பட்சத்தில் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தும் உறுப்பினர் இரண்டாவது முறை வாக்களிக்கலாம் அல்லது அவரின் வாக்கு முடிவெடுக்கும் வாக்காக இருக்கலாம்.

**29. எந்த ஒரு நடவடிக்கையும் காலியாக இருப்பதலோ அல்லது குறைபாடு காரணமாகவோ செல்லாததாகாது (No Proceeding to be invalid due to vacancy or any defect):**

மத்திய ஆலோசனை வாரியத்தில் நிலவும் எந்தவொரு காலியிடத்திலோ அல்லது வாரியத்தின் அமைப்பில் ஏதேனும் குறைபாட்டிலோ வாரியத்தின் எந்தவொரு நடவடிக்கையும் செல்லாதது அல்ல.

# மாவட்டச் செய்திகள்...

**அரியலூர் மாவட்ட செய்தி:**

ஆகஸ்ட் 15, 2022 அன்று 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பத்மஸ்ரீ வித்யாலயா பள்ளியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பள்ளிக் குழந்தைகளுக்கும் மாற்றுத்திறனாளி பிள்ளைகளுக்கும் நல்ல விஷயங்களை பகிர்ந்தேன். நமது கூட்டமைப்பின் பெருமைகளையும் மாவட்ட நிர்வாக செயல்பாடுகளையும்

எடுத்துரைத்தேன். நான் இந்த நிகழ்விற்கு சென்றது மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது. ஏனென்றால் இதுவரை எந்தப் பள்ளியிலும் இந்த மாதிரியான ஒரு நிகழ்வுக்கும் என்னை அழைத்தது கிடையாது.

நான் பேசியது அங்கு கூடியிருந்த



பெற்றோர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். இது நமது சுதந்திர தின விழாவில் மாற்றுத்திறனாளி மக்களுக்கு கிடைத்த ஒரு சாதனை என்பதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த நிகழ்வில் பள்ளியின் தாளாளர் பத்மஸ்ரீ அம்மா அவர்கள், சிறுகதை எழுத்தாளர் ஷோபனா பன்னீர்செல்வம் அவர்கள், தமிழ்நாடு கூட்டமைப்பின் மாநில துணைச் செயலாளர் இரா.அன்பழகன், மகளிர் அணி தலைவி தவமணி அவர்கள் மற்றும் நமது சங்க பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சுதந்திர தின விழா சீரும் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

**இரா.அன்பழகன்**
மாவட்ட செயலாளர் மற்றும்
மாநில துணைச் செயலாளர்
அரியலூர் மாவட்டம்

## இராமநாதபுரம் மாவட்ட செய்தி:

ஜெயம் கிராமப்புற பெண்கள் குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் மேம்பாட்டு சங்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடத்திய மாநில அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கான அமர்வு கைப்பந்து போட்டியில் கோவை அணி சாம்பியன் பட்டம் வென்ற நிகழ்வு.



**திரு.முனியசாமி**
**மாவட்ட தலைவர்**

## திருச்சி மாவட்ட செய்தி:

திருச்சி மாவட்ட உடல் ஊனமுற்றோர் முன்னேற்ற சங்கம் சார்பாக மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு புத்தகப்பை மற்றும் குறும்பேடுகள் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் மேலாளர் பேங்க் ஆப் பரோடா சென்னை ஐஐடி நிறுவனத்தில் சேர்ந்த சேர்த்த முத்து கனகவேல் ஆகியோர் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு புத்தகப்பை மற்றும் குறும்பேடுகள் வழங்கினார்கள்.



**திரு.மாரிக்கண்ணன்**
மாவட்ட செயலாளர்

# விளையாட்டுச் செய்தி

## காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் இந்திய வீல்சேர் வாள்வீச்சு வீரர்கள் சாதனை :

கடந்த மாதம் ஜுலை 28 முதல் ஆகஸ்ட் 8ந் தேதி இங்கிலாந்து நாட்டில் உள்ள ஃபெர்மிங்காம் நகரில் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் சிறப்பம்சமாக மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளில் நடைபெற்றது. இப்போட்டியில்



இந்திய வீரர்களும் கலந்து கொண்டனர்.

இவற்றில் வீல்சேர் வாள்வீசும் போட்டிகள் நடைபெற்றது. வரலாற்றில் முதன்முறையாக திரு.ராகவேந்திரர் எப்பி பி பிரிவில் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார். அதே பிரிவில் மற்றொரு வீரர் திரு.தேவேந்திர குமார் அவர்கள் வெண்கல பதக்கம் பெற்றனர். இதனால் காமன்வெல்த் போட்டிகளில் முதல் முறையாக வீல்சேர் வாள் வீசும் போட்டிகளில் இந்திய வீரர்கள் இரண்டு பதக்கங்கள் பெற்றது. இதுவே முதல் முறையாகும்.

இந்திய பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களும் இந்திய பாராலிம்பிக் கமிட்டியும் இருவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தனர், வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.


**முனைவர்.பா.சந்திரகுமார்**
**மாநில பொருளாளர்**

**தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் கூட்டமைப்பு**

---

## செஸ் ஒலிம்பியாட்: தன்னம்பிக்கையுடன் காய் நகர்த்தும் பார்வை குறைபாடுள்ள நடாஷா...

மாமல்லபுரத்தில் கொண்டாடப்பட்டு வரும் செஸ் ஒலிம்பியாட் தொடரில் பார்வை குறைபாடு உடைய வீராங்கனை ஒருவர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகிறார்.



செஸ் போர்டை துல்லியமாக பார்க்க முடியாத நிலையிலும் தன்னம்பிக்கையின் உருவகமாக திகழும் அவரை பற்றி இந்த செய்தி குறிப்பில் பார்க்கலாம்.

44-வது செஸ் ஒலிம்பியாட் தொடரில் நுட்பமாக காய் நகர்த்தி வரும் வீரர், வீராங்கனைகளுக்கு இடையே பார்வைத்திறன் குறையுடன், காய் நகர்த்தி, வியப்பில் ஆழ்த்தினார் மோரல்ஸ் சேன்டோஸ் நடாஷா **(Morales Santos Natasha)..** போர்டோரிகா நாட்டை சேர்த்த இவர், அந்நாட்டு மகளிர் அணியின் முதன்மை வீராங்கனையாக உலா வருகிறார். நடாஷாவுக்கு ஒரு கண்ணில் பார்வைத்திறன் குறைபாடு, மற்றொரு கண்ணில் பாதி பார்வை மட்டுமே உள்ளது.

24 வயதான நடாஷா 1924 ஃபிடே ரேட்டிங் புள்ளிகளுடன் போர்டோரிகா நாட்டின் தலை சிறந்த வீராங்கனையாக விளங்குகிறார். இவரின் அணியின் மற்ற நான்கு வீராங்கனைகளை விட நடாஷாவின் ரேட்டிங் புள்ளிகளே அதிகம். சர்வதேச

மகளிர் செஸ் மாஸ்டரான இவர், தேசிய அணியின் நட்சத்திர வீராங்கனையாகவும், நம்பிக்கை நாயகியாகவும் திகழ்கிறார்.

ஐந்து அடி துாரத்துக்குள் இருக்கும் பொருட்களை மட்டுமே பார்க்க முடிந்த நடாஷாவால், 10 நிமிடத்திற்கு மேல் தொடர்ந்து ஒருபொருளை உற்று நோக்குவது மிகவும் கடினம். ஆனால், மணிக்கணக்கில் ஒரே இடத்தில் அமர்ந்து, செஸ் போர்டை மட்டுமே கூர்ந்து கவனித்து, காய்களை நகர்த்துவதற்கான வியூகத்தை நடாஷாவால் எப்படி வகுக்க முடிகிறதா? இதுவே, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

ஒலிம்பியாட் போட்டியில் தனக்கென தனி செஸ் போர்டுடன் அமர்ந்து போட்டிக்கு தயாராகும் நடாஷா வழக்கமான போர்டில் ஆட முடியாதுது என்பதால் அவர் சொல்லச் சொல்ல தமிழகத்தை சேர்ந்த செஸ் வீரரான மாரிமுத்து காய்களை நகர்த்தி உதவுகிறார்.

இதுவரை நடந்து முடிந்த 6 சுற்றுகளின் முடிவில், நடாஷா ஒரு போட்டியில் வெற்றிபெற்றார். இரண்டு போட்டிகளில் டிராவும், மூன்று போட்டிகளில் தோல்விகளையும் சந்தித்தார். போர்டோரிகா அணி, 110-வது இடத்தில் உள்ள போதும், நடாஷாவின் ஆட்டத்தை அனைவரும் வியப்புடன் கவனிக்கின்றனர். 3-வது முறையாக செஸ் ஒலிம்பியாட்டில் பங்கேற்றுள்ள நடாஷாவிற்கு, தமிழகத்தின் உபசரிப்பு மெய்சிலிர்க்க வைப்பதாக கூறுகிறார்.

வாழ்க்கையில் அனைத்து வசதிகள் இருந்தும் போராடாமல், தோல்விக்கு காரணத்தை தேடி அழையும் நபர்களுக்கு மத்தியில். பார்வைத்திறன் குறைபாடு உள்ள நடாஷா உதிர்க்கும் வார்த்தை, அனைவரிடத்திலும், நம்பிக்கையை விதைக்கும் வகையில் அமைந்துள்ளது.

## <u>ஏதாவது வேலை போட்டுக்கொடுங்க ஐயா..! தமிழகத்தைத் தலை நிமிரச் செய்த தங்கமகனின் துயரம்</u> !

வேலூர் மாவட்டம், குடியாத்தம் காமாட்சியம்மன் பேட்டையில் இருக்கிறது. குருவிக்கூட்டைப் போன்ற அந்த சிறிய வீடு. பாசம் கொட்டிக்கிடக்கும் அந்த வீட்டுக்குள் வயதான தாய், தந்தையரோடு வசித்து வருகிறார் 35 வயதாகும் மாற்றுத்திறனாளி தடகள வீரர் வெங்கடாச்சலம்!

இரண்டு கால்களும் செயலிழந்து போன நிலையிலும், தீவிரப் பயிற்சி, விடா முயற்சியால் தேசிய, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் கலந்துகொண்டு வெற்றி மகுடம் சூடியிருக்கிறார். வீட்டின் வரவேற்பறையில் அழகாக அலங்கரிக்கப்பட வேண்டிய நூற்றுக்கணக்கான வெற்றிப் பதக்கங்களும்,



வெற்றிக் கோப்பைகளும் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் காட்சி, வெங்கடாச்சலத்தின் வறுமையையும், ஓயாத அவரின் தொடர் போராட்டத்தையும் துயர்மிகு கதையாகச் சொல்கிறது.

ஒவ்வொரு வேளை உணவுக்கும் வெங்கடாச்சலத்தை நம்பியே காத்திருக்கிறது குடும்பம். ஏதாவது வேலைப் போட்டுக்கொடுங்க ஐயா...என்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலகத்தில் மனு கொடுத்துக் கொடுத்து ஓய்ந்துபோனவர், அரசின் ஊக்கத்தொகை கிடைக்காததால் சர்வதேசப் போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியாமல், வீட்டிலேயே வீல்சேரில் முடங்கிக் கிடக்கிறார். அவரைச் சந்தித்தோம்...‘‘நான் பிறப்பிலேயே மாற்றுத்திறனாளி இல்லைங்க. பத்தாவது முடிச்சிட்டு எலெக்ட்ரீஷியன் வேலைக்குப் போய்க்கிட்டிருந்தேன். 2009-ல், என் தங்கச்சி எம்.சி.ஏ., படிச்சுக்கிட்டிருந்தா. ஒரு நாள் அவளை

காலேஜ்ல விடுறதுக்காக பைக்குல கூட்டிக்கிட்டுப் போய்க்கிட்டிருந்தேன். அப்போ, மாடு குறுக்கே வந்துடுச்சு. நடுரோட்டுல விழுந்த ரெண்டு பேரும் குத்துயிரும் குலையுயிருமா கிடந்தோம்.

கண்ணை முழிச்சுப் பார்த்தப்போ, ஹாஸ்பிட்டல்ல இருந்தேன். தங்கச்சி செத்துப்போயிட்டானு சொன்னாங்க. அவளைப் பார்க்கிறதுக்காக பெட்டுலருந்து இறங்கி ஓடப் பார்த்தேன். முடியலை. எனக்கு முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு, இடுப்புக்குக் கீழ் உணர்வில்லாமல் போயிடுச்சி டாக்டருங்க சரிசெய்ய முடியாதுனு சொல்லிட்டாங்க. மூணு வருஷம் படுத்த படுக்கையா கிடந்தேன். இந்த அதிர்ச்சியிலிருந்தே குடும்பம் மீளாத அந்த நேரத்துல, 2013 ஆம் ஆண்டு என் அண்ணனைக் கொள்ளைக் கும்பல் கொடூரமா கொலை பண்ணிட்டாங்க.

குடியாத்தத்துல இருக்குற ஒரு நகைக்கடையில அண்ணன் வேலை பார்த்துக்கிட்டிருந்தாரு. ஒரு நாள் நைட்டு கடையை வழக்கம்போலப் பூட்டிட்டு கலெக்‌ஷன் பணத்தோட வீட்டுக்கு வந்துக்கிட்டிருந்தாரு. இதை கவனிச்ச கும்பல்தான் கத்தியால குத்திட்டாங்க. இப்படி அடுத்தடுத்த அடிகளால் குடும்பமே நிலைகுலைஞ்சு போயிடுச்சு.

எனக்கு ஒரு பிசியோ தெரபிஸ்ட் அறிமுகமானாரு. அவர்தான் வீல்சேரில் இருந்துகிட்டே, கூடைப்பந்து, குண்டு எரியறது, ஈட்டி எரியுற விளையாட்டையெல்லாம் விளையாடக் கத்துக்கொடுத்தாரு. முதல்ல மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் சின்னச் சின்ன விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக்கிட்டேன்.

2016-ல் ஹரியானாவுல நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு சார்பில் கலந்துக்கிட்டு ரெண்டு பதக்கம் ஜெயிச்சேன். பாரா அத்லெடிக் விளையாட்டுகள் முழுமையாக கவனம் செலுத்தினேன். நாட்டுக்காகவும், நம்ம மாநிலத்துக்காகவும், இன்னும் ஜெயிக்கணும்னு வெறி இருக்கு. ஆனா, உதவிதான் கிடைக்கலைங்க'' என்கிறார் கண்ணீரோடும், திறமையும், உத்வேகமும், போராட்டமுமாக வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த வீரருக்கு அரசு விரைந்து உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

**29 ஜூலை 2022 விகடன்**

## வேலைவாய்ப்பு செய்திகள்...

**ரூ.1,60,000/- ஊதியத்தில் மத்திய அரசு வேலைவாய்ப்பு – உடனே விண்ணப்பியுங்கள்**

**New Space India Limited (NSIL)** நிறுவனத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டி அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. **Manager, Chief Manager** போன்ற பல்வேறு பணிகளுக்கான பணியிடங்கள் காலியாக இருப்பதாக அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த நொடியே விண்ணப்பித்து இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். கல்வி, வயது, விண்ணப்பிக்கும் முறை போன்ற பணிக்கு தொடர்பான தகவல்கள் அனைத்தும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனம்
பணியின் பெயர்
பணியிடங்கள் விண்ணப்பிக்க கடைசி தேதி
விண்ணப்பிக்கும் முறை
**New Space India Limited (NSIL)**
**Manager, Chief Manager & others 26**
**15.09.2022**
**Online & offline**

**New Space India Limited காலிப்பணியிடங்கள்**

- Chief Manager பணிக்கு 03 பணியிடங்கள்,
- Deputy Manager பணிக்கு 15 பணியிடங்கள்,
- **Manager** பணிக்கு 06 பணியிடங்கள்,
- **Company Secretary** பணிக்கு 01 பணியிடம்,
- **Executive Secretary** பணிக்கு 01 பணியிடம் என மொத்தமாக 26 பணியிடங்கள் **New Space India Limited (NSIL)** நிறுவனத்தில் காலியாக உள்ளது.

**NSIL கல்வித்தகுதி :**

இந்த **NSIL** பணிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படும் பணிக்கு ஏற்ப அரசு அல்லது அனுமதி பெற்ற கல்லூரி / பல்கலைக்கழகங்களில் **Electronics, Aerospace, EEE, ECE** போன்ற பணிக்கு தொடர்புடைய பாடப்

பிரிவுகளில் **CA, ICWA, Graduate Degree, BE, B.Tech, Master Degree, M.Sc, MSW, MBA, M.A, Post Graduation Degree** களில் ஏதேனும் ஒன்றை பெற்றவராக இருக்க வேண்டும்.

**NSIL வயது வரம்பு :**

- **Chief Manager, Company Secretary** பணிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 27.08.2022 அன்றைய தேதியின் படி, அதிகபட்சம் 48 வயதிற்குள் உள்ளவராக இருக்க வேண்டும்.

- மற்ற பணிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 27.08.2022 அன்றைய தேதியின்படி, அதிகபட்சம் 45 வயதிற்குள் உள்ளவராக இருக்க வேண்டும்.

- **OBC** - 03 ஆண்டுகள், **SC/ST**- 05 ஆண்டுகள் என வயது தளர்வுகளும் தரப்பட்டுள்ளது.

**NSIL ஊதியம் :**

- **Chief Manager** பணிக்கு ரூ.80,000/- முதல் ரூ.2,20,000/- வரை என்றும்,

- **Deputy Manager** பணிக்கு ரூ.50,000/- முதல் ரூ.1,60,000/- வரை என்றும்,
- **Manager** பணிக்கு ரூ.60,000/- முதல் ரூ.1,80,000/- வரை என்றும்,

- **Company Secretary** பணிக்கு ரூ.80,000/- முதல் ரூ.2,20,000/- வரை என்றும்

- **Executive Secretary** பணிக்கு ரூ.50,000/- முதல் ரூ.1,60,000/- வரை என்றும் மாத ஊதியமாக தரப்படும்.

**New Space India Limite தேர்வு செய்யும் விதம் :**

இப்பணிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

**New Space India Limite விண்ணப்ப கட்டணம் :**

- இப்பணிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ரூ.500/- விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

- **SC / ST / Ex-Serviceman / PWD** போன்றவர்களுக்கு விண்ணப்ப கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**New Space India Limite விண்ணப்பிக்கும் விதம்**

- இப்பணிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி மற்றும் திறமை உள்ள விண்ணப்பதாரர்கள் இப்பதிவின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள இணையதள இணைப்பின் மூலம் விண்ணப்பத்தை Onlineல் பதிவு செய்து கொள்ளலாம்.

- பின் பதிவு செய்த விண்ணப்பத்தின் நகலுடன் தேவையான சான்றிதழ்களின் நகலை இணைத்து அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபால் செய்ய வேண்டும் இறுதி நாளுக்குள் (15.09.2022) பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

Download Notification Link
https://drive.google.com/file/d/1Ja8x633tl3za9DJAqjh5oNFGKVGK0Iuy/view
Online Application Link
https://www.nsilindia.co.in/

---

**முடித்தவர்களுக்கு.. மாதம் ரூ.18.000/- சம்பளத்தில் மத்திய அரசு வேலை...!!**

எல்லை சாலை அமைப்பு, பொது இருப்பு பொறியாளர் படையில் உள்ள காலியிடங்களுக்கு தகுதியாளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

நிறுவனத்தின் பெயர் : Border Road Organisation, General Reserve Engineer Force
பணியின் பெயர் : Cook, Electrician, Welder and Other
கல்வித்தகுதி : 10th /12th /ITI/Diploma
சம்பளம்: ரூ.18,000 முதல் ரூ.56,900 வரை
கடைசி தேதி : செப்டம்பர் 26
கூடுதல் விவரங்களுக்கு : www .bro.gov.in

http://www.bro.gov.in/WriteReadData/linkimages/7447860318-Advt.pdf

**செய்தி சோலை இணையதளம்**

## 36 காலியிடங்கள்...பார்க் நிறுவனத்தில் அறிவியல் உதவியாளர் பணி...மிஸ் பண்ணிடாதீங்க...!!!

இந்திய அரசின் நிறுவனமான பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) பல்வேறு பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது. செவிலியர் / ஏ கிரேடு – காலியிடங்கள் – 13, அறிவியல் உதவியாளர் / பி கிரேடு – நோயியல் – 2, அணு மருத்துவம் தொழில் நுட்பவியலாளர் – 8, மருத்துவ பணியாளர் – 1, சிவில் – 8, துணை அலுவலர் –பி கிரேடு – 4, மொத்தம் 36 காலியிடங்கள் உள்ளன. தகுதி வரம்புகள், விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள், தேர்வு செயல்முறை, சம்பளம் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட அறிவிப்புகள் www.barc.gov.in மற்றும் https://recruit.barc.gov.in இல் உள்ளன. செப்டம்பர் 12-ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

**செய்தி சோலை**

---

## 323 காலி பணியிடங்கள்.. எல்லை பாதுகாப்பு படையில் வேலை.. உடனே அப்ளை பண்ணுங்க..!!!

எல்லை பாதுகாப்பு படையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பணி : அசிஸ்டன்ஸ் சப் இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டபிள்

காலி பணியிடங்கள்: 323



வயது: 25க்குள்

தேர்ச்சி : எழுத்து தேர்வு மற்றும் தட்டச்சு தேர்வு ஆகிய முறையில் விண்ணப்பிக்கும் நபர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: செப்டம்பர் 6

மேலும், இது குறித்த கூடுதல் விவரங்களுக்கு https://rectt.bsf.gov.in/என்ற இணையதள பக்கத்தை அணுகவும்.

**செய்தி சோலை**

---

## 10வது /12வது படித்தவர்களுக்கு...மாதம் ரூ.18000 சம்பளத்தில்.. எல்லை சாலை அமைப்பில் வேலைவாய்ப்பு...!!!

எல்லை சாலை அமைப்பு, பொது இருப்பு பொறியாளர் படையில் உள்ள காலியிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

நிறுவனத்தின் பெயர் : Border Road Organisation, General Reserve Engineer Force



பணியாளர் பெயர்: **Cook, Electrician, Welder, and Other**
**கல்வித் தகுதி: 10th/ 12th/ITI Diploma**
**சம்பளம் :** Rs 18,000 - 56,900
**கடைசி தேதி :** 26.09.2022
**கூடுதல் விவரங்களுக்கு :**www.bro.gov.in

## கவிதை...

அண்டி வந்தவனை அலைகழிப்பவன்
ஆணவச் சொல்லில் மகிழ்ந்து கிடப்பவன்
உண்டி கொடுத்து உதவாதவன்
உண்டியல் குலுக்கி உடலை வளர்ப்பவன்
உள்ளத்தில் நல்லதை வைக்க மறந்தவன்
ஊரார் உழைப்பில் உண்டு உண்டு மகிழ்ந்தவன்
உண்மையை மறைத்து பொய்யை விளம்பரம் செய்பவன்
ஊதாரியாய் சுற்றி உருபடாமல் போனவன்
ஊழ்வினை நிலையை மறந்து வாழ்பவன்
ஊனமுற்றோரை உதாசீனப்படுத்தியவன்
எட்டாக் கனிக்கு இச்சை கொள்பவன்
ஏழையின் மனதை வாட்டி வதைப்பவன்
இல்லறம் காக்க மறந்து போனவன்
ஏழ்மையை என்றும் எள்ளி நகைப்பவன்
ஏளனப் பேச்சில் மூழ்கி கிடப்பவன்
ஐய்யம் தெளியா அகங்காரகன்
ஒற்றுமை உணர்வை உதறி நடப்பவன்
ஓம் காரப் பொருளை மறந்து வாழ்பவன்
அன்னையின் அன்பை அலை கழித்தவன்
அண்டி வந்தார்க்கு அடக்கலம் தறாதவன்
நோயாளியை நோகடிப்பவன்
மனிதம் அறியாதது ஏன் – மனிதா
நீ மண்ணில் தோன்றியது வீண் – என்றும்
மனதில் கொள்ளாதே நான்
மனமிரங்கி மழை பொழியுது வான்
இது போன்றோர் மண்ணுக்கு ஒப்பாய் இருப்பதே மகத்தானது
மனிதனாய் வாழ்வதைவிட
மானிடமே மகான்களின் வரலாறை வாசியுங்கள்.
மாற்றுத்திறனாளிகளை நேசியுங்கள்.
உலக மக்களுக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் சங்கங்களின் சார்பாக
சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்!



**பி.அந்தோனி**
இவண் பி.கண்ணதாசப் பரதேசி
பெரமண்டூர்

## பிற பத்திரிக்கை செய்திகள்...

### மாற்றுத்திறனாளிகள் நலன் காப்போம்!

உலக மக்கள் தொகையில் மிகப்பெரிய எண்ணிக்கையிலான சிறுபான்மையினர் மதம் சார்ந்தோர் அல்ல, மாற்றுத்திறனாளிகளே என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. உலக மக்களில் சுமார் 96 பேர் ஏதேனும் ஒரு வகையில் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த அமைப்பு கூறுகிறது. பிறவிலேயே உடல் ஊனம் இருப்போர், இளம் வயதில் ஏற்பட்ட நோயால் ஊனமானோர், விபத்து, முதுமை போன்ற காரணங்களால் ஊனமுற்றோர், இவை தவிர மநோய்க்கு ஆளாகி உள்ளவர்களையும் இந்த சிறுபான்மையினர் பிரிவில் உலக சுகாதார அமைப்பு வைக்கிறது.

நம் மத்திய - மாநில அரசுகள் மாற்றுத்திறனாளிகளின் நலம் சார்ந்த பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. குறிப்பாக மருத்துவ வசதி,கல்வி வசதி, சுய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, பணிகளில் முன்னுரிமை, இட ஒதுக்கீடு, உபகரணங்கள், பயணச்சலுகை, பொருளுதவி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இருப்பினும், மாற்றுத்திறனாளிகள் பல இடர்ப்பாடுகளைக் கடந்த பின்னரே இவற்றை அடைய முடிகிறது.

எது சரியாக கணக்கிடப்பட முடியாது என்று கூறுவர். தரவுகள் சேகரிக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதுபோல, அத்தரவுகள் நம்பகமானதாக, உண்மையானதாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

புள்ளி விவரங்களின் அடிப்படையில் தான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நிதி ஒதுக்கப்படுகிறது. நமது செயல் திட்டம் என்னும் சங்கிலியில் புள்ளி விவரம் என்பது ஒரு பலவீனமான வளையமாக மாறிவிடக்கூடாது.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் சுமார் மூன்று கோடி பேர் (2.5%) மாற்றுத்திறனாளிகள் ஆவர். பல சிறிய நாடுகளின் மக்கள்தொகையை விடவும் இந்த எண்ணிக்கை பெரிது. மாற்றுத்திறனாளிகளில் 80% பேர் மிகவும் ஏழைகள். அவர்களில் பலர், குடும்பத்தினராலும் பிறராலும் ஒதுக்கப்பட்டு, வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பது வருத்தத்துக்குரியது.

உலக சுகாதார அமைப்பு தரும் புள்ளி விவரம் ஒன்று அதிர்ச்சி அளிக்கிறது. வளர்ந்த நாடுகளில், குழந்தை இறப்பு விகித கணக்கெடுப்பில், உடல் ஊனத்துடன் பிறக்கின்ற குழந்தைகள் அதிக இறப்புக்கு உள்ளாவது அக்குழந்தைகள், கொல்லப்படுகிறார்களோ எனும் ஐயத்தை உலக சுகாதார அமைப்புக்கு ஏற்படுத்தியுள்ளது. மாற்றுத்திறனாளிகளில் உலக அளவில் கல்வி கற்பவர்கள் சுமார் 3% பேர் என்றும், பெண்களில் கல்வி பெறுபவர்கள் ஒரு சதவீதத்தினர் மட்டுமே என்றும் தெரிகிறது.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் மாற்றுத்திறனாளிகள் குறித்த தரவுகள் அறிவியல் பூர்வமாக சேகரிக்கப்படுகின்றன. வயது, கல்வி, வருவாய், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. அத்தரவுகளின் அடிப்படையில் பல முடிவுகளை மேற்கொண்டு உதவிகள் வழங்கப்படுகின்றன.

உதாரணத்துக்கு இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், ஜப்பானில் சில தலைமுறையினர் மாற்றுத்திறனாளிகளாக மாறினர். அது ஒரு தேசிய பிரச்சனையா உருவெடுத்தது. ஆனால் அப்பிரச்சனை முறையாக அணுகப்பட்டு குறைபாடுகளுக்கு தீர்வு காணப்பட்டது. அவர்களுக்கு அடையாள அட்டையும், மருத்துவ பரிசோதனை அடிப்படையில் அவர்களுக்கு தரப்பட வேண்டிய மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

உதாரணமாக பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு பிரெயில் முறை தட்டச்சு இயந்திரம் , இயந்திரம், பேசும் புத்தகங்கள், தட்டச்சு கடிகாரங்கள், கால்குலேட்டர்கள், காது கேளாதோருக்கு கருவிகள், இன்னும் பல்வேறு குறைபாடு உள்ளவர்களுக்கு மிக நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவர்களது குறைபாட்டுக்கு ஏற்ப பொருளாதார உதவியும் செய்யப்படுகிறது. முப்பதாயிரம் எண்ணிலிருந்து என்பதாயிரம் எண்வரை (ரூ.15,000 முதல் 40 ஆயிரம் வரை) ஒவ்வொ மாதமும் வழங்கப்படுகிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளில், மாற்றுத்திறனாளிகள் தங்கள் குறையை உணராத அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றனர். உதாரணமாக, சுயதொழில் தொடங்க சகல விதமான வசதிகளும் செய்து தரப்படுகின்றன. அங்கு மாற்றுத்திறனாளிகளில் எட்டு பேருக்கு ஒருவரும், குறைபாடற்ற மனிதர்களில் 12 பேருக்கு ஒருவரும் சுயதொழில்களில் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவில், ஒவ்வொரு சிறு பகுதிக்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு அவர் மூலம் மருத்துவம், பள்ளிக்கூடம், நூலகம், மனமகிழ் மன்றம், சலுகைகள், வசதிகள் இவற்றை அடைவது எப்படி என்ற தகவல்கள் கொண்டு சேர்க்கப்படுகின்றன. அவர்களுக்கான பிரத்யேக தொலைத்தொடர்பு வசதி மூலம் அவர்களது கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படுகிறது. தன்னார்வக்குழு அல்லது தன்னார்வம் மிக்க தனி மனிதர்களின் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன.

நம் நாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள், சேவைகள் தரத்தை உயர்த்த ஒரு சிறந்த வழி, வளர்ந்த நாடுகள் பலவற்றின் செயல்பாடுகளை ஆய்ந்தறிந்து அவற்றில் உள்ள மிகச் சிறந்த கூறுகளை நம் நாட்டுக்கேற்ப தகுந்த முறையில் வடிவமைத்துக் கொள்வதாகும்.

பொதுவாக, அரசு அலுவலகத்தில் நிலவும் அலைக்கழிப்புகள் நாம் அறிந்ததே. இந்த பின்னணியில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் உரிமைகள், சலுகைகள் ஆகியவற்றைப் பெறுவதையும், அவர்கள் அலைக்கழிப்புக்கு ஆளாக்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். ஒரு வலைப் பின்னல் ஏற்படுத்தி ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு தன்னார்வலர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அவர் மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் சார்ந்த தகவல்களும், உதவிகளும் கொண்டு சேர்க்கப்பட வேண்டும்.

இவை தவிர, இரண்டு முக்கியமான பிரச்சனைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒன்று, மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்படக்கூடிய தாழ்வு மனப்பான்மை, மற்றொன்று, அவர்கள் மீது ஏனையோருக்கு ஏற்படக்கூடிய அலட்சியப்போக்கு. இவ்விரண்டும் உளவியல் ரீதியில் அணுகிதீர்க்கப்பட வேண்டியவை. இது குறித்து விழிப்புணர்வும், புரிதலும், நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

**செய்தி சோலை**

## மாநில அளவில் 3-வது இடம் நீட் தேர்வில் அரசு பள்ளி மாற்றுத்திறனாளி மாணவி சாதனை

நீட் தேர்வில் அரசு பள்ளியில் படித்த மாற்றுத்திறனாளி மாணவி மாநில அளவில் 3-வது இடம் பெற்று சாதனை படைத்தார். அவர் காலை இழந்தாலும் தன்னம்பிக்கையை இழக்கவில்லை என கூறினார். மணவாளக்குறிச்சி, குளச்சல் அருகே மண்டைக்காடு, கூட்டுமங்கலத்தை சேர்ந்தவர்



நாராயண பிள்ளை, வெல்டிங் தொழிலாளி, இவருடைய மனைவி நீலகண்டேஸ்வரி. இவர்களது 2-வது மகள் தர்ஷனா. இவர் தற்போதுநடந்த நீட் தேர்வில் மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 157 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் 3-வது இடம் பெற்றார். மாணவி தர்ஷனா மணவாளக்குறிச்சியில் உள்ள அரசு பள்ளியில் 7-ம் வகுப்பு படிக்கும்போது கார் மோதி வலது கால் முறிந்தது. அதன் பின்பு செயற்கை கால் பொருத்தி பள்ளிப் படிப்பை முடித்தார். அத்துடன் நீட் தேர்விலும் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். தனது சாதனை குறித்து மாணவி தர்ஷனா கூறியதாவது:-

நான் 1-ம் வகுப்பு முதல் 6-ம் வகுப்பு வரை வீட்டின் அருகே உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் படித்தேன். 7-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை மணவாளக்குறிச்சி அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் படித்தேன். 2015-ம் ஆண்டு 7-ம் வகுப்பு படிக்கும்போது இறுதி தேர்வு சமயத்தில் பள்ளிக்கு செல்வதற்காக பஸ்சிற்கு காத்து நின்றேன். அப்போது கார் மோதி வலது கால் முறிந்தது. பின்னர், திருவனந்தபுரம் தனியார் ஆஸ்பத்திரியில் 27 நாட்கள் சிகிச்சை பெற்று செயற்கை கால் பொருத்தினேன். சிறுவயது முதல் எனக்கு மருத்துவம் படிக்க விருப்பம். விபத்தில் காலை இழந்தாலும் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. மன உறுதியுடன் படித்தேன். கடந்த ஆண்டு 11 மற்றும் 12-ம் வகுப்புகளில் பாடம் மாறியது. புதிய பாடத்திட்டம் நீட் தேர்வுக்கு ஏற்ற மாதிரி இருந்தது. மாநில மொழி கல்வியை நன்றாக படித்தாலே நீட் தேர்வில் வெற்றி பெறலாம். நீட் எழுத விண்ணப்பம் செய்துவிட்டு மருத்துவ பரிசோதனைக்கு சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு சென்றேன். அங்கு மருத்துவர்கள் நீட் சம்பந்தமான வினா-விடை அடங்கிய 3 புத்தகங்கள் வழங்கினர். அந்த புத்தகம் எனக்கு மிகவும் உதவியாக இருந்தன. அந்த புத்தகங்களை நன்றாக படித்துவிட்டு நீட் தேர்வு எழுதினேன். பயிற்சி மையம் எதிலும் நான் சென்று படிக்க செல்லவில்லை. தேர்வு முடிவில் மாற்றுத்திறனாளிகள் பிரிவில் மாநில அளவில் 3-வது இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கலந்தாய்வில் ஆசாரிப்பள்ளம் மருத்துவக்கல்லூரியில் இடம் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கிறேன். இவ்வாறு அவர் கூறினார். மாணவி தர்ஷனாவுக்கு சொப்பனா என்ற ஒரு அக்காள் உண்டு. அவர் என்ஜினீயரிங் முடித்து விட்டு சென்னையில் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். சாதனை படைத்த மாணவியை முன்னாள் மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன் அவரது வீட்டிற்கு சென்று பொன்னாடை போர்த்தி பாராட்டி வாழ்த்து கூறினார். அப்போது பா.ஜனதா துணைத்தலைவர் குமரி ப.ரமேஷ், பஞ்சாயத்து துணைத் தலைவர் சிவகுமார், மாவட்ட மகளிர் அணி தலைவர் மகேஸ்வரி முருகேசன் மற்றும் நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

**தினத்தந்தி இணைய நாளிதழ்**
நாள்: 09.09.2022

## மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக தொண்டு புரிந்த தஞ்சை, நாகை மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக தொண்டு புரிந்த தஞ்சை, நாகை மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது தமிழக முதல்வரால் கடந்த ஆகஸ்ட் 15ந் தேதி வழங்கப்பட்டது.

### மாநில விருதுகள்

இதுகுறித்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் இரா. ஆனந்தகுமார் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவின்போது மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக தொண்டு புரிந்ததற்காக குறிப்பிட்ட சில பிரிவினருக்கு தமிழ்நாடு அரசின் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக மாநில அளவிலான தேர்வுக்குழுவை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டது. அதைத்தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த நபர்கள், நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் தமிழக அரசின் மாநில விருதுகளை வழங்குவதற்காக சிறந்த சேவையாற்றிய நபர்கள், நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

### சிறந்த ஆட்சியர்கள்

அந்த விண்ணப்பங்களில் இருந்து தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களை தேர்வு செய்வதற்காக கடந்த ஜூலை 15-ந் தேதி தேர்வுக் குழு கூட்டம் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயலாளர் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் விண்ணப்பங்களை உறுப்பினர்கள் ஆய்வு செய்து அளித்த ஆலோசனையின்படி தமிழக அரசின் விருதாளர்களை முடிவு செய்து அரசு அரசு ஆணையிட்டது. அதன்படி மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்ததற்காக சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது, தஞ்சை மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவருக்கும், நாகை மாவட்ட ஆட்சியர் அ.அருண் தம்புராஜுக்கும் வழங்கப்பட்டது.

### சிறந்த நிறுவனங்கள்

சிறந்த மருத்துவர் விருது உதகை மலைவீதி மருத்துவமனை குடியிருப்பைச் சேர்ந்த டாக்டர் பா.ஜெய்கணேஷ் மூர்த்திக்கும், சிறந்த நிறுவனத்துக்கான விருது புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் களமாவூர் ரெனாசான்ஸ் அறக்கட்டளைக்கும், சிறந்த சமூக பணியாளர் விருது மதுரை எஸ்.எஸ்.காலனி க.அமுதசாந்திக்கும், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்துக்கான விருது புதுக்கோட்டை மாவட்டம் நாகமலை, அலம்பட்டி, மதுரை-தேனி சாலையில் உள்ள டாபேஜெரிஹாப்சென்டர் நிறுவனத்துக்கும், சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கான விருது திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கிக்கும் வழங்கப்பட்டது.

இந்த விருதுகள் சுதந்திர தின விழாவின் போது ஆட்சியர்கள் தவிர மற்றவர்களுக்கு முதல் அமைச்சரால் வழங்கப்பட்டது. விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு, மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வழங்கப்படும்.

**தினத்தந்தி நாளிதழ்**
நாள்; 11.08.2022

---

## நாட்டுக்கோழி வளர்ப்பு மூலம் மாதம் ரூ.60,000 இலாபம் ஈட்டும் மாற்றுத்திறனாளியின் அசத்தல் முயற்சி

தஞ்சாவூர் நகரப்பகுதியான நாஞ்சிக் கோட்டை சாலையில் அமைந்துள்ளது ஆசிரியர் காலனி. இங்கு வசித்து வரும் அன்பழகன் தன் வீட்டின் வளாகத்தில் உள்ள 2,400 சதுர அடி காலிமனையில் நாட்டுக்கோழி வளர்த்து நிறைவான இலாபம் ஈட்டி வருகிறார். இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி இளைஞரான இவருக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு பெரிதும்

கைகொடுத்திருக்கிறது. இதன் மூலம் வீட்டில் இருந்தபடியே இவர் வருமானம் ஈட்டி வருவது அப்பகுதி மக்களிடையே கவனத்தை ஈர்த்துள்ளது.

ஒரு இனிய மாலைப் பொழுதில் இவரைச் சந்திக்க சென்றிருந்த போது கோழிகளுக்குத் தீவனம் கொடுத்துக் கொண்டிருந்த அன்பழகன், மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றார். டவுனுக்கு



உள்ளார, அதுவும் வீடுகள் நிறைஞ்ச பகுதியில் அதிக எண்ணிக்கையில் நான் நாட்டுக்கோழி வளர்க்கிறதை பலரும் ஆச்சரியமாக பார்க்கிறார்கள். ஆனால், ஒரு யதார்த்தத்தைச் சொல்ல வேண்டுமென்றால், இது நகரம் என்பதால் தான் என்னோட நாட்டுக்கோழிகளையும், முட்டைகளையும் மக்கள்கிட்ட நேரடியாக நல்ல விலைக்கு விற்பனை செய்து, சுலபமாக இலாபம் பார்க்க முடிகிறது. கிராமப்புறங்களைவிட, நகரங்களில்தான் இதற்கு வரவேற்பு அதிகம் என்றவர், தன்னைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

என்னுடைய அப்பா வேளாண்மைத் துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். நான் பாலிடெக்னிக் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்பு முடித்ததும் வேலை தேட ஆரம்பிச்சேன். என்னுடைய படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லை. சம்பளமும் குறைவாக இருந்தது. அதனால் வேலை தேடும் முயற்சியிலேயே மூன்று வருஷம் ஒடிப்போயிடுச்சு. வேலைக்கே போகாமல் எவ்வளவு நாள்தான் வீட்டில் சும்மாவே இருப்பது சொந்தக்காரங்க கேட்க ஆரம்பிச்சாங்க. அப்பொழுதுதான் சொந்தமாக ஏதாவது தொழில் செய்யலாம் என்கிற முடிவுக்கு வந்தேன். எங்கள் பகுதியில் ஒரு வீட்டில் ஐந்தாறு கோழிகள் வளர்த்துக்கிட்டு இருக்கிறார்கள். அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு யோசனை தோன்றிது. இதையே நாமும் மிகவும் பெரிய அளவில் செய்து பார்க்கலாம் என தோன்றிது.

என்னோட இந்த யோசனையை என் அப்பாவிடம் சொன்னேன். கணிப்பொறி படிப்பு படிச்சு கோழி வளர்க்கப் போகிறியா என அதிர்ச்சியோடு கேட்டார். வேறு ஏதாவது செய்யலாம் பொறுமையாக இருன்னு சொன்னார். ஆனால், நான் என்னோட முடிவில் உறுதியாகவும், தெளிவாகவும் இருந்ததினால், உனக்குச் சரியாக வரும் என்கிற நம்பிக்கை இருந்தால், எந்தத் தயக்கமும் இல்லாமல் செய் என என்னை உற்சாகப்படுத்தினார். 44 கோழிகள் வாங்கினேன். அப்பா கொடுத்த பணத்தில் எங்க வீட்டை ஒட்டியுள்ள எங்களுக்குச் சொந்தமான 2,400 சதுர அடி காலிமனையில் கொட்டகைகள் அமைத்து 2018-ம் வருடம் சிறுவிடை, பெருவிடை ரகங்களைச் சேர்ந்த 40 தாய் கோழிகளும், 4 சேவல்களும் வளர்க்க ஆரம்பிச்சேன். படிப்படியாக பெருகி, இப்போது 250 கோழிகள் இருக்கிறது.

**<u>தீவனம்</u>**

ஒரத்தநாடு பக்கத்தில் உள்ள தெக்கூரில் எங்களுக்கு விவசாய நிலம் இருக்கிறது. நெல் சாகுபடி செய்துகிட்டு இருக்கிறோம். அதில் ஒதுங்கக்கூடிய தரமற்ற நெல், கோழிகளுக்குத் தீவனமாக பயன்படுகிறது. இதனால் தீவன செலவு பெருமளவு குறைகிறது. இந்த 250 கோழிகளுக்கும் மொத்தமாக சேர்த்து தினமும் 10 கிலோ நெல் தீவனமாக போடுகிறேன். கடைகளில் கிடைக்கக்கூடிய தரம் குறைவான அரிசி 4 கிலோ, கோதுமை 2 கிலோ, கேழ்வரகு 1 கிலோ என தினமும் தீவனமாக போடுகிறேன். எங்க வயல்களில் கோ-4, கோ-6 புல் சாகுபடி செய்கிறோம். அதை பசுந் தீவனமாக தினமும் கொடுக்கிறேன். முருங்கைக் கீரையும் கொடுப்பேன். இதனால் என்னோட நாட்டுக்கோழிகள் நல்ல ஆரோக்கியமாக வளர்கிறது. குஞ்சுகளுக்கு ஒரு மாதம் வரைக்கும் கடைகளில் கிடைக்கக்கூடிய குஞ்சு தீவனம் கொடுக்கிறேன். முட்டைகளுக்கு சிறுவிடை...இறைச்சிகளுக்கு பெருவிடை.

சிறுவிடை கோழிகளில் முட்டை அதிகமாக கிடைக்கும். 16-20 நாட்களுக்கு தினமும் ஒரு முட்டை வீதம் கிடைக்கும். ஆனால், ஐந்தாறு மாதம் ஆனாலும் ஒன்றேகால் கிலோதான் எடை இருக்கும். பெருவிடை கோழியில் முட்டைகள் குறைவாக கிடைக்கும். 11-15 நாட்கள் வரைக்கும்தான் முட்டை இடும். ஆனால் நல்ல சதை பார்த்தால், உடல் எடை இரண்டே கால் கிலோவுக்கு மேல் இருக்கும். இறைச்சி விற்பனைக்காகக் கோழி வளர்க்கணும்னு நினைக்கிறவர்கள், பெருவிடை வளர்க்கலாம். முட்டை விற்பனை மூலம் வருமானம் பார்க்கணும்னு விரும்பக் கூடியவர்கள் சிறுவிடை வளர்க்கலாம்.

## ஓய்வுக்காலம்

தாய்க்கோழி முட்டையிட்டு முடிச்சதும் அடுத்த ஒரு வாரத்திற்கு ஓய்வில் இருக்கும். அதற்குப் பிறகு சேவலோடு சேரும். அடுத்த ஒரு வாரம் கழித்து முட்டையிட ஆரம்பிக்கும். முட்டைகளை இன்குபேட்டர்ல 21 நாட்கள் வச்சிருந்தோம்னா, குஞ்சுகள் பொரிச்சிடும். அந்தக் குஞ்சுகளை 15-20 முட்டை, குஞ்சு, கோழி என எல்லாம் விற்கிறேன்.

முட்டை, குஞ்சு வளர்ந்த நிலையில் உள்ள கோழிகள் மூன்று விதமாகவும் விற்பனை செய்துகிட்டு இருக்கிறேன். இதனால் பராமரிக்க எளிமையாக இருக்கிறது. மக்கள் இங்கேயே தேடி வந்து வாங்கிக்கிட்டு போகிறார்கள். ஒரு முட்டை 15 ரூபாய் என்கிற விலையில் மாதத்துக்கு 1,500 முட்டைகள் விற்பனை செய்கிறேன். ஒருநாள் வயதுடைய குஞ்சு 60 ரூபாய் விலையில் மாதத்துக்கு 300 குஞ்சுகள் விற்கிறேன். ஒரு மாத வயதுடைய குஞ்சு 95 ரூபாய் விலையில் 200 குஞ்சுகள் விற்பனை செய்கிறேன். 140-150 நாட்கள் வயதில் ஒரு கிலோவுக்கு மேல் எடையுள்ள பெரிய கோழி 370 ரூபாய் விலையில் 30 கோழிகள் விற்பனை செய்கிறேன். ஆக ஒரு மாதத்துக்கு 70,600 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதில் தீவனம் உள்ளிட்ட செலவுகள் போக 60,000 ரூபாய் நிகரலாபமாக கையில் கிடைக்கிறது. வீட்டுக்குப் பக்கத்திலேயே இதைச் செய்கிறதனால் எந்த நேரமும் இதை நான் நன்றாக கவனிக்க முடிகிறது. விற்பனைக்கும் வசதியாக இருக்கிறது. முழுமையான உழைப்புச் செலுத்துகிறதனால் தான் இந்த அளவுக்கு நிறைவான இலாபம் கிடைச்சுக்கிட்டு இருக்கிறது. நான் வெளியில் எங்கேயாவது போயிருந்தாகூட இந்த அளவுக்கு வருமானம் கிடைக்குமா என சொல்ல முடியாது. இது ரொம்பவே மனசுக்கு நிறைவாக இருக்கிறது என மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

## கொட்டகையும் மேய்ச்சலும்

"22 அடி நீளம், 11 அடி அகலத்துக்குக் கொட்டகை அமைத்திருக்கிறேன். மூன்று அடி உயரத்துக்கு ரெடிமேட் சிமெண்ட் காம்பவுண்டில் சுற்றுச்சுவர்கள் அமைத்து அதற்கு மேல் 6 அடி உயரத்துக்குக் கம்பி வலைகள் அடைத்திருக்கிறேன். மேற்கூரைக்குத் தகர சீட் போட்டிருக்கிறேன். கொட்டகையோடு உயரம் தரையில் இருந்து 9-10 அடி. இது பெரிய கோழிகளுக்கான கொட்டகை. குஞ்சுகள் வளர்ப்புக்காக, 10 அடி நீளம், 4 அடி அகலம், 7 அடி உயரத்துக்குக் கம்பி வலைகளால் கொட்டகை அமைத்திருக்கிறேன். இதை 8 அறைகளாக பிரித்திருக்கிறேன். இந்தக் கொட்டகைக்கு ஓடுகளால் மேற்கூரை அமைத்திருக்கிறேன். இந்த இரண்டும் மொத்தம் ரூ.74,000 செலவு ஆயிடுச்சு.

## தேடி அலைஞ்சு வாங்கினேன்

கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் விவசாயிகள் வளர்க்கக்கூடிய ஒரிஜினல் நாட்டுக்கோழிகளை வாங்கித்தான் வளர்க்கணும்னு ஆரம்பித்திலேயே முடிவெடுத்து, பல நாட்கள் அலைந்து திரிஞ்சி வாங்கினேன். சிறுவிடை, பெருவிடை ரகங்களில் 40 பெட்டைக் கோழிகளும், நாலு சேவல்களும் வாங்கிட்டு வந்தேன். ஒரு கோழிக்கு 250 ரூபாய் வீதம் 11,000 ரூபாய் முதலீடு செய்தேன்.

## மேய்ச்சல்

காலையில் பொழுது விடிந்ததும் கொட்டகையைத் திறந்து விட்டுவிடுவேன். இந்தக் காலி மனையோட மொத்த பரப்பு 2,400 சதுர அடி. இதில் 250 சதுர அடி பரப்பை மட்டும்தான் கொட்டகைக்குப் பயன்படுத்தி

இருக்கிறோம். மீதியுள்ள 1,950 சதுர அடி இடம் கோழிகள் மேய்றதுக்கு தராளமாக போதும். காம்பவுண்டு சுவரை தாண்டி கோழிகள் வேறு எங்கேயும் பறந்து போகாமல் இருக்கிறது. அதுக்கு மேல 6 அடி உயரத்துக்குப் பச்சைநிற துணி வலை கட்டியிருக்கிறோம். திறந்த வெளியில் மேய்ச்சல இருக்கிறப்போ, வெயிலோட தாக்கத்தைக் குறைக்க, ஒரு வேப்ப மரமும் பலா மரமும் இங்கே இருக்கிறது என்கிறார் அன்பழகன்.

மழைக்காலத்தில் கோழிகள் முட்டையிடும் திறன் குறைஞ்சு விடும். நோய் தாக்குதல்களால் பாதிப்புகள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகம். அதனால் மழைக்காலம் நெருங்க ஆரம்பிச்சதுமே, வழக்கமான எண்ணிக்கையில் இருந்து 25 சதவீதம் கோழிகளைக் குறைச்சிடுவேன். அதாவது, அதற்கேற்றபடி முன் கூட்டியே விற்பனை செய்திடுவேன்.

வெள்ளைக் கழிச்சல் நோய் வராமல் பாதுகாக்க மஞ்சள் தூள், மிளகு, சீரகம், இஞ்சி, வேப்பிலை, குப்பைமேனி இதையெல்லாம் ஒன்றாக கலந்து மிக்சியில் போட்டு அரைத்து நெல், அரிசி மாதிரியான ஏதாவது ஒரு தீவனத்தில் பிசைஞ்சு கொடுப்பேன். கொடாப்புல இருந்து காலை நேரத்தில் கோழிகளைத் திறந்து விடும்போது வயிறு காலியாக இருக்கும். அந்தச் சமயத்தில் இந்த மருந்தைக் கொடுப்பேன். இது வெள்ளைக் கழிச்சல் நோயை முற்றிலும் கட்டுப்படுத்துகிறது.

வெயில் காலங்களில் உடல் உஷ்ணமாகி, பாதிப்பு ஏற்படாமல் இருக்க வெந்தயம், நெல்லிக்காயை அரைத்து தண்ணீரில் கலந்து கொடுப்பேன். கோழிக்கு சளி பிடிச்சா, அதைக் கட்டுப்படுத்த குப்பைமேனி, ஆடா தொடை இலைகளை ஒன்றாக கலந்து அரைத்து, அதில் இருந்து சாறு எடுத்துத் தண்ணீரில் கலந்து கொடுப்பேன்.

## ஆடு வளர்ப்பு

கடந்த ஒன்றரை வருடமாக ஆடுகளும் வளர்த்துக்கிட்டு இருக்கிறேன். இப்போது எட்டு ஆடுகள் இருக்கிறது. ஆடுகள் குட்டி போட்டதும் ஆறு மாதம் வரைக்கும் வச்சிருந்து வளர்த்து அதுக்குப் பிறகு விற்பனை செய்கிறேன். ஒரு கிலோ உயிர் எடை 450 ரூபாய் என்கிற விலையில் கணக்குப் போட்டு விற்பனை செய்கிறேன்.

## நாட்டு மாடுகள்

இங்க ரெண்டு நாட்டுப் பசுக்களும், கன்றுக்குட்டிகளும் வளர்த்துக்கிட்டு இருக்கிறேன். தினமும் ஒரு லிட்டர் பால் கிடைக்கிறது. இதை எங்க வீட்டு தேவைக்குப் பயன்படுத்துகிறோம். மாட்டு எரு, ஆட்டு எரு, கோழி எரு எல்லாவற்றையும் எங்க வயலுக்கு உரமாகப் பயன்படுத்துகிறேன்.

## கோழி வளர்ப்பு கொடுத்த 2 ஏக்கர் நிலம்

கோழி வளர்ப்பை காட்டி வங்கியில் 6 லட்சம் ரூபாய் கடன் வாங்கினேன். அந்தப் பணத்தை வைத்து, 2 ஏக்கர் நிலம் வாங்கி விவசாயமும் செய்ய ஆரம்பித்தேன். கோழி வளர்ப்பு மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தில் இருந்து 12,000 ரூபாய் எடுத்து வங்கிக்குத் தவணை கட்டிக்கிட்டு இருக்கேன் என்கிறார் அன்பழகன். தொடர்புக்கு அன்பழகன் செல்:70948 69626

**Daily hunt** இணைய செய்தி நாள் ; 10. 08.2022

---

## மாற்றுத்திறனாளி பெற்றோருக்கு மானியத்துடன் வங்கிக் கடன்

மாற்றுத்திறனாளி பெற்றோா மானியத்துடன் வங்கிக் கடன் பெற மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படம், பெற்றோரின் வங்கிக் கணக்கு புத்தகம் ஆகியவை தேவை.

மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகள் சுய தொழில் தொடங்கும் வகையில் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பொதுத்துறை வங்கிகளில் வழங்கப்படும். கடன் தொகையில் 20 சதவீதம் முதல் ரூ.15 ஆயிரம் வரை மானியமாக வழங்கப்படும்.

இந்தக் கடன் தொகையை 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோர் குழந்தைகளின் பெற்றோரும், 18 வயதுக்கு மேற்பட்ட தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோரும் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கடன்

பெற மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படம், பெற்றோரின் வங்கிக் கணக்கு புத்தகம் நகல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் இணைய செய்தி நாள்: 3 ஆகஸ்ட், 2022

## மாற்றுத்திறனாளி இளைஞருக்கு கைகளை பொருத்தி 'சாதனை' படைத்த தமிழ்நாட்டு மருத்துவர்கள்!

தனியார் மருத்துவமனை வெளியிட்ட செய்திக்குறிப்பில், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் 2018-ம் ஆண்டு மின்சாரம் தாக்கியதில் தீக்காயங்களுக்கு ஆளானதால், தனது இரு கைகளையும் இழந்துள்ளார். அவரது தாயார் அவரை கவனித்து வந்துள்ளார்.

இந்நிலையில் கை மாற்று அறுவை சிகிச்சைக்காக தமிழ்நாடு மாநில அரசு ஆதரவு பெற்ற மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்தில் (TRANSTAN) பதிவு செய்த மருத்துவர்களுக்கு, கடந்த மே 28ம் தேதி அன்று குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து கை தானம் செய்பவர்



பற்றிய தகவல் கிடைத்தது. தேவையான அனுமதியை சேகரித்த பிறகு, கைகள் அகமதாபாத்தில் இருந்து சென்னைக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டது.

மேலும் செய்திகளுக்கு..

ஆகஸ்ட் 3 பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை: வெளியான அதிரடி உத்தரவு!

மருத்துவ நிபுணர்கள் மூலம் வெற்றிகரமாக மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர். பிளாஸ்டிக் இன்ஸ்டிடியூட் இயக்குநரும் மூத்த ஆலோசகருமான எஸ்.செல்வ சீதாராமன் தலைமையிலான டாக்டர்கள் குழு, எட்டு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள், நான்கு எலும்பியல் மருத்துவர்கள், ஒரு வாஸ்குலர் சர்ஜன், நான்கு மயக்கவியல் நிபுணர்கள், ஒரு நரம்பியல் நிபுணர் மற்றும் 30 துணை மருத்துவ பணியாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். இந்த அறுவை சிகிச்சை மே 28ம் தேதி அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அந்த நோயாளி நன்றாக இருக்கிறார். இது குறித்து கருத்து தெரிவித்த குடியரசு துணை தலைவர் வெங்கையா நாயுடு, மாநிலங்கள் முழுவதும் இது குறிப்பிடத்தக்க மற்றும் அர்ப்பணிப்புகள் மருத்துவர்களால் நாடு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு பெருமை அளிக்கிறது. ஒரு குழுவாக இதை அடைவதில் மருத்துவர்கள் மிகவும் உன்னிப்பான அணுகுமுறையை எடுத்துள்ளனர். மூளை இறந்த நோயாளிகளின் கைகளை தானம் செய்வதற்கும், ஊனமுற்றோருக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை வழங்குவதற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றும் கூறியுள்ளார்.

**ஏசியன்நெட் நியூஸ்**

தமிழ் ஆகஸ்ட் 2, 2022

## விருதுநகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான சுயம்வரம் நிகழ்ச்சி

விருதுநகரில் ஆர்.ஆர்.நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான சுயம்வரம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 200-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர். பி.டபிள்யூ.டி, டிரஸ்ட், புது வசந்தம் மாற்றுத்திறனு -டையோர் கூட்டமைப்பு, ராம்கோ சமூக சேவைக்



விருதுநகரில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான சுயம்வர விழா.

கழகம், தமிழ்நாடு மாற்றுத்திறனுடையோர் கூட்டமைப்பு சங்கம், ஸ்ரீசீதாபவன் அறக்கட்டளை இணைந்து ஆர்.ஆர்.நகரில் உள்ள ராம்கோ சிமெண்ட் ஆலை வளாகத்தில் உள்ள பி.ஏ.சி.ஆர். திருமண மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்தின.

இந்த சுயம்வரம் நிகழ்ச்சியில் ஆட்சியர் ஜெ.மேகநாதரெட்டி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து பேசியதாவது:-

மாற்றுத்திறனாளிகள் ஒவ்வொருவருக்கும் தனித்திறமை இருக்கும். அதை வெளிக்கொண்டு வந்து வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும். இந்த சுயம்வரத்தில் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொண்டு எப்போதும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றார்.

தி ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவன நிர்வாகத் தலைவர் ராமலிங்கம் சிறப்புரையாற்றினார். விருதுநகர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரசேகர், தமிழ்நாடு 28-வது பட்டாலியன் என்.சி.சி. குரூப் கமாண்டர் ஆறுமுகம், மாவட்ட சமூகநல அலுவலர் இந்திரா, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் நாராயணசாமி ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் சிம்மசந்திரன் அவர்கள் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்தினார். இதில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 200-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

**ராஜேஷ்வரி, விருதுநகர்**

## மாற்றுத்திறனாளிகளின் குழந்தைகளுக்கு காவேரி மருத்துவமனையில் மறுவாழ்வு மையம் நடிகர் விக்ரம் மருத்துவமனையை திறந்து வைத்தார்

சென்னை காவேரி மருத்துவமனையில் ஆட்டிசம் உள்ளிட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான, புதிய மறுவாழ்வு மையம் துவக்கப்பட்டுள்ளது. சென்னையை அடுத்த ஓ.எம்.ஆர்., சாலையில் காவேரி மருத்துவமனையின், 'ஹம்சா ரீஹேப்' மைய துவக்க விழா நடைபெற்றது. காவேரி மருத்துவமனையில் ஓர் அங்கமாக செயல்படும் மையத்தில், ஆட்டிசம், கற்றல் குறைபாடு, பேச்சுக்கோளாறுகள், மூளை மற்றும் முதுகு தண்டு காயத்தால் சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு மறுவாழ்வு மையமாக செயல்பட உள்ளது.

இந்த மருத்துவமனையை நடிகர் விக்ரம் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:-

நான் நடித்த இரண்டு படங்கள் வெளியீட்டுக்கு தயாராக உள்ள நிலையில், வெளி நிகழ்ச்சிகளுக்கு செல்ல முடியாத நிலையில், குழந்தைகளுக்கான மையம் திறப்பு விழா என்பதால் விழாவில் பங்கேற்க ஒப்புக்கொண்டேன்.

சினிமாவில் தான் நாங்கள் ஹீரோ, உண்மையில் டாக்டர்கள் தான் ஹீரோக்கள், சிறுவயதில் நான் டாக்டராக வேண்டும் என, பெற்றோர் விரும்பினர். மதிப்பெண் குறைவாக இருந்ததால், டாக்டர் ஆக வேண்டும் என்ற கனவு நிறைவேறாமல் போனது. இவ்வாறு நடிகர் விக்ரம் அவர்கள் உரையில் கூறினார்.




காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனரும், நிர்வாக இயக்குனருமான டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் அவர்கள் பேசியதாவது:-

ஹம்சா மையத்தின் வாயிலாக, முதுகுதண்டு, நரம்பியல் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பிந்தைய சிக்கல்கள் போன்றவற்றிற்கு முழுமையான சிகிச்சை வழங்கி வருகிறோம். அதேபோல், ஆட்டிசம் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் இத்தகைய பாதிப்புகளை நாங்கள் பார்க்கிறோம். எனவே, அவர்களுக்கான சுற்றுச்சூழல், நவீன கட்டமைப்பு, மேம்பட்ட சாதனங்கள் வசதிகளுடன் சிகிச்சை நிபுணர்கள், குழந்தைகள் நல மற்றும் மறுவாழ்வு டாக்டர்கள் அடங்கிய குழுவை, இப்புதிய மையத்தில் வழங்குகிறோம். இம்மையத்தில் இருப்பவர்கள் அர்ப்பணிப்பு உணர்வும், குழந்தைகள் மீதான அக்கறையும் கொண்டவர்களாக உள்ளனர்.

**தினமலர் நாளிதழ்**
நாள்: 18.08.2022

**வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்**

**அனுப்புநர்**
ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்),
எழிலகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005

**பெறுநர்**
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

**ந.க.எண்.வரு.தணி 5(1) / 36084 / 2021 நாள்: 02.08.2022**

ஐயா / அம்மையீர்,

**பொருள்:** சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் – தரவு தூய்மை விவரங்கள் – கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது – தகுதியில்லாத இனங்கள் நீக்கம் செய்யப்பட்டது – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.26, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்.17.04.2015
2. அரசாணை (நிலை) எண்.27, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்.22.02.2016
3. அரசாணை (நிலை) எண்.41, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள்.28.05.2018.

-----

பார்வையில் காணும் அரசாணைகளின் மீது தங்களின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.

2) சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற்று வரும் பயனாளிகளின் தரவு தூய்மை பணி, கீழ்குறிப்பிட்ட இனங்களில் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மூலம் செய்யப்பட்டு, கீழ்கண்ட இனங்கள் வாரியாக விவரங்கள் பெறப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் ஆய்வு செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

1 இறப்புப் பட்டியலுடன் சரிபார்க்கப்பட்டது.

2 IFHRMS அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுடன் சரிபார்க்கப்பட்டது.

3 தொழிலாளர் ஓய்வூதியம் பெறுவோர் பயனாளிகளின் தரவுகளுடன் சரிபார்க்கப்பட்டது.

4 மாற்றுத் திறனாளிகள் துறை மூலம் ஓய்வூதியம் பெறுவோர் நலன் சார்ந்த தரவுகளுடன் சரிபார்க்கப் பட்டது.

5 NPHH-NC மற்றும் NPHH-S இன் ரேஷன் கார்டுடன் சரிபார்க்கப் பட்டது.

6 பத்திரப் பதிவுகளுடன் சரிபார்க்கப்பட்டது.

7 இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட LPG சிலிண்டர் வைத்திருப்போர் பட்டியலுடன் சரிபார்க்கப்பட்டது.

8 நகைக் கடன் தரவுகளுடன் சரிபார்க்கப்பட்டது.

9 அரசு அலுவலரை கொண்ட குடும்பங்கள்

3) மேற்படி பட்டியல்களை கணக்கில் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியின் அடிப்படையில் 'தகுதியற்ற இனங்கள்' நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

4) மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத்தை பொறுத்த வரையில், வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள இனங்களின் கீழ் வரும் பயனாளிகளின் ஓய்வூதியத்தை களஆய்விற்கு பின்னர் இரத்து செய்தும், வரிசை எண் 5 முதல் 9 வரை உள்ள இனங்களை அரசாணை (நிலை) எண்.41, சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.25.08.2018-ல் தெரிவித்துள்ள கீழ்கண்ட நிபந்தனைகளை தவிர, 40% மற்றும் அதற்கு மேல் உள்ள உடல் குறைபாடு சார்ந்தவர்களை, அவர்களின் வாழ்வாதார நிலை மற்றும் திட்டத்தின் தகுதிகளை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அரசு நிறுவனங்களில் நிரந்தரப் பணிகளில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகள்
- நிரந்தர அடிப்படையில் தனியார் துறையில் பணியமர்த்தப்பட்டு, முறையான மாத ஊதியம் பெறுவதன் மூலம் ஆண்டு வருமானம் ரூபாய் 3 லட்சத்திற்கு மேல் ஈட்டும் மாற்றுத் திறனாளிகள்
- சுயதொழில் செய்வதன் மூலம் ஆண்டு வருமானம் ரூபாய் 3 லட்சத்திற்கு மேல் ஈட்டும் மாற்றுத் திறனாளிகள்

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/-ந.வெங்கடாசலம்,
ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்).

நகல்
தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி),
அனைத்து மாவட்டங்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

02/08/2022
கண்காணிப்பாளர்

## ABSTRACT

Schemes - Micro, Small and Medium Enterprises Department - Unemployed Youth Employment Generation Programme (UYEGP) - Self Employment Scheme - Relaxation in eligibility criteria for the persons with disabilities and the parents of children with Intellectual Disabilities and Autism spectrum disorder - Orders issued.

## MICRO, SMALL AND MEDIUM ENTERPRISES [D(2)] DEPARTMENT

**G.O. (Ms.) No.63** **Dated 18.08.2022**

**திருவள்ளுவர் ஆண்டு 2053**
**சுபகிருது வருடம், ஆவணி 2**
**Read:**

1. G.O. (Ms.) No.80, Micro, Small and Medium Enterprises (D2) Department, dated 30.07.2010.
2. From the Industries Commissioner and Director of Industries and Commerce letter Rc. No.16769/DIC4/ 2022, dated 09.06.2022.

--------

**ORDER:**

In the Government Order first read above, orders have been issued for the implementation of Unemployed Youth Employment Generation Programme (UYEGP), a self employment scheme, fully sponsored and financed by the Government of Tamil Nadu from the year 2010-2011.

2. As per the norms in force, the minimum age is 18 years and maximum age is 35 years in case of General Category and 45 years for Special Category (i.e.,) SC / ST / MBC / BC /Minorities / Women / Ex-servicemen / Differently-abled under UYEGP. The required educational qualification is pass in 8$^{th}$ Standard for availing financial assistance subject to the condition that the family income should not be exceeded Rs.5.00 lakh per annum.

3. In the letter second read above, the Industries Commissioner and Director of Industries and Commerce has stated that a discussion was held on 31.5.2022 with State level and District level Associations for Differently-abled persons. During the discussion, the representatives have requested for relaxations in the eligibility criteria, i.e., upper age limit, family income ceiling and waiver of educational qualification under Unemployed Youth Employment Generation Programme (UYEGP) Scheme for the persons with disabilities and for the persons with mentally disabled wards.

4. The Industries Commissioner and Director of Industries and Commerce has therefore requested the Government to issue orders for waiving the upper age limit, family income ceiling and educational qualification for getting assistance under Unemployed Youth Employment Generation Programme (UYEGP) with respect to the persons with disabilities and the parents of mentally challenged Children.

5. The Government after careful examination of the request of Industries Commissioner and Director of Industries and Commerce issue the following orders:-

i) The Upper age limit shall be enhanced from 45 years to 55 years and the required minimum educational qualification of pass in $8^{th}$ standard shall be removed for getting assistance under Unemployed Youth Employment Generation Programme (UYEGP) in respect of Person with Disabilities and Parents of Children with Intellectual Disabilities and Autism spectrum disorder.

ii) These relaxations will take effect from the date of issue of this order.

6. This order issues with the concurrence of Finance Department vide its U.O. No.32012/Finance(Ind)/2022, dated: 27.06.2022.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**V.ARUN ROY**
**SECRETARY TO GOVERNMENT**

To
The Industries Commissioner and Director of Industries and Commerce, Guindy, Chennai-32.
The Accountant General, Chennai-18.
The Pay and Accounts Officer, Chennai-8.

**Copy to:**
The Personal Assistant to Hon'ble Minister (MS&ME), Chennai-9.
The Personal Assistant to Secretary to Government, Micro, Small and Medium Enterprises Department, Chennai-9.
All District Industries Centres.
The Finance (Ind) Department, Chennai-9.
The Micro, Small and Medium Enterprises (OP / B) Department, Chennai-9.
Stock file / Spare copy.

**// FORWARDED BY ORDER //**

N. [signature] 18.08.22

**SECTION OFFICER**

சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – மாற்றுத்திறனாளிகளுக்கு சாலை ஓரங்களில் தள்ளுவண்டி கடை நடத்த நகரவிற்பனைக் குழுவின் விதிமுறைப்படி முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.23

நாள்: 11.08.2022,
சுபகிருது, ஆடி 26,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3069/பணியமர்த்தல்/2021, நாள் 23.04.2022.

******

ஆணை:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

"மாற்றுத்திறனாளிகளுக்கு சாலை ஓரங்களில் தள்ளுவண்டி கடைநடத்த நகரவிற்பனைக் குழுவின் விதிமுறைப்படி முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்".

2. மேலே படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016-ன் படி, வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்பு போன்ற திட்டங்களின் மூலம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தெருவோர தள்ளுவண்டி கடைகள் நடத்துவதில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளித்திடவும், இத்திட்டத்தினை தற்போதைய நிதியாண்டிலேயே தொடர்ந்திட உரிய ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கு சாலை ஓரங்களில் தள்ளுவண்டி கடைகளை நடத்த நகர விற்பனைக் குழுவின் விதிமுறைகளுக்கிணங்க மாற்றுத்திறனாளிகளுக்கு கீழ்க்காணும் முன்னுரிமையின் அடிப்படையில் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

அ) மாற்றுத்திறனாளிகளுக்கு ஒவ்வொரு மண்டல / வார்டு அளவில் நடைபெறும் ஒதுக்கீட்டில் முன்னுரிமை.

ஆ) தேர்வு செய்யப்பட்ட இடங்களில் இடப்பற்றாக்குறை உள்ளபோது மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை.

இ) விற்பனைக்கு அனுமதி இல்லாத இடங்களிலிருந்து கடைகளுக்கு மாற்று இடம் ஒதுக்கீடு செய்திடும் பொழுது ஏற்கெனவே மாற்றுத்திறனாளிகள் தொழில் செய்து வந்த இடங்களுக்கு அருகிலேயே கடை ஒதுக்கீடு வழங்குவதில் முன்னுரிமை.

ஈ) மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு அருகில் விற்பனைக்குரிய இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்களிலும் கடைகள் ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை.

4. மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையானது தெருவோர வியாபாரிகளின் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் தெருவோர வியாபாரத்தை முறைப்படுத்துதல்) திட்டம், 2015 (Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and regularization of street vending) Scheme, 2015) கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் தெருவோரத்தில் வியாபாரம் செய்வதற்கான சான்றிதழ்களை வழங்கிட உரிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (Urban Local Bodies) மூலம் அனைத்து நகர விற்பனை குழுக்களுக்கு (TVC) அறிவுறுத்திட உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி இத்திட்டத்தினை செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இவ்வாணை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அ.சா. எண்.13039/ந.நி–4(2)/2022, நாள் 04.08.2022-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் ம.வ.மே.) அலுவலகம், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (ந.நி–4) துறை, சென்னை–9.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை–9/35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்.
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.

**நகல்:-**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
11.8.22

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட், சென்னை-35.

**விளம்பர அறிவிக்கை**

தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் காலியாகவுள்ள ஐந்து (5) அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் நியமிக்கும் பொருட்டு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற கீழ்க்காணும் பிரிவுகளை சார்ந்த 18 வயது பூர்த்தியடைந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| S.No | Category | Reservation | Priority/ Non-Priority | Age Limit ( As on 01.07.2022) | Scale of Pay |
|---|---|---|---|---|---|
| 1. | SC | | Priority | 37 | Rs.15700- 58,100/- (Level-1) |
| 2. | MBC/DNC | Destitute Widow | Non-Priority | 34 | |
| 3. | BC (Other than BC Muslims) | Destitute Widow | Non-Priority | 34 | |
| 4. | General Turn | | Non-Priority | 32 | |
| 5. | BC (Other than BC Muslims) | | Non-Priority | 34 | |

2. தமிழ்நாடு அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களுக்கு அந்தந்த பிரிவினருக்கு உரிய வயது வரம்பிலிருந்து தளர்வு செய்யப்படும்.

3. விண்ணப்பதாரர்கள் சென்னை மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

4. *www.tnsic.gov.in* என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், செயலாளர், தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட், நந்தனம், சென்னை-35 என்ற முகவரிக்கு 02.09.2022-க்குள் கிடைக்குமாறு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

5. மேற்கண்ட நியமனத்திற்கான நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யவோ, சென்னை, தமிழ்நாடு தகவல் ஆணைய செயலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும், தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத் தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செயலாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை-35

குறைகள்
இருப்பது
இயல்பு ;
அதை
மதிக்கொண்டு
ஜெயிப்பது தான்
மதிப்பு !

M.G. ராகுல்,
புகைப்பட கலைஞர்



## தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை-35

**அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்ப படிவம்**

பாஸ்போர்ட் அளவு

புகைப்படம்

1. விண்ணப்பதாரர் பெயர் : ....................
2. தந்தை / கணவர் பெயர் : ....................
3. பிறந்த தேதி ( பள்ளி சான்றிதழ்படி) மற்றும் வயது (01.07.2022 அன்று) : ....................
4. பாலினம் : ஆண் / பெண்
5. வகுப்பு மற்றும் உட்பிரிவு (சாதி சான்று இணைக்கவும்) : BC / MBC / DNC/ SC / OTHERS
6. நிரந்தர முகவரி : ....................
7. கைப்பேசி எண் : ....................
8. திருமணம் ஆனவரா? : ஆம் / இல்லை
9. கல்வி தகுதி : ....................
10. தற்போது பணிபுரியும் விவரம் : ....................
11. ஆதரவற்ற விதவை என்பதற்கான இடஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கிறீர்களா? (ஆம் எனில் சான்றின் நகல் இணைக்கவும்) : ஆம் / இல்லை
12. அரசாணை (நிலை) எண்.122, மனித வள மேலாண்மைத் (கே-2)துறை, நாள் 02.11.2021-ன் படி வேறு ஏதேனும் "முன்னுரிமை" கோருகிறீர்களா? (ஆம் எனில் சான்றின் நகல் இணைக்கவும்) : ஆம் / இல்லை

**உறுதிமொழி :**

நான் மேலே கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். மேலும், எந்நிலையிலும் நான் அரசுக்கு கண்ணியம் அளிக்கும் முறையில் நடந்து கொள்வேன் என உறுதியளிக்கிறேன்.


இடம் :

நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்

## தற்காலிக பார்வையிழப்பு... அறிகுறிகளும், தீர்வுகளும்


மைக்ரேன் எனப்படும் ஒற்றைத் தலைவலியால் சிலருக்கு தற்காலிக பார்வையிழப்பு ஏற்படலாம். தவிர, ஆப்தல்மோப்ளெஜிக் மைக்ரேன் **(Ophthalmoplegic migraine)** எனும் பிரச்சனையாலும், தற்காலிக பார்வையிழப்பு ஏற்படலாம். கண்களில் ஃபிளாஷ் அடிப்பது, பார்வையில் தடுமாற்றம் போன்ற தொந்தரவுகள் ஏற்படலாம்.



ஷார்ட் மெமரி லாஸ் என்றொருரு விஷயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஷார்ட் டேர்ம் விஷன்லாஸ் பற்றி கேள்விப்பட்டதுண்டா?

தற்காலிகமாகப் பார்வையிழப்பு ஏற்படும் அந்த பிரச்சனை குறித்து விரிவாகப் பேசுகிறார். சென்னையைச் சேர்ந்த விழித்திரை சிகிச்சை மருத்துவர் வசுமதி வேதாந்தம்.

குறுகிய காலத்துக்கு நினைவாற்றல் பறிபோய் திரும்புவதை ஷார்ட் டேர்ம் மெமரி லாஸ் என்கிறோம். அதேபோல குறுகிய காலத்துக்கு பார்வையிழப்பு ஏற்படுவதை ஷார்ட் டேர்ம் விஷன் லாஸ் என்கிறோம்.



இதைக் கண் மருத்துவத்தில் அமெளரோசிஸ் ஃபியூகே **(Amaurosis fugax)** என்கிறோம். அதேபோல குறுகிய காலத்துக்கு பார்வையிழப்பு ஏற்படுவதை ஷார்ட் டேர்ம் விஷன் என்கிறோம்.

இதைக் கண் மருத்துவத்தில் அமெளரோசிஸ் ஃபியூகே என்கிறோம். இந்த பிரச்சனையில் கண்ணுக்கு முன்பு மேலிருந்து ஒரு திரை கீழே இறங்கி, கீழிருந்து மேலே போகும். இது சில நொடிகள் முதல் அரிதாகச் சிலருக்கு ஒரு நிமிடம் வரை கூட நீடிக்கலாம். இது பொதுவாக ஒரு கண்ணை மட்டும் பாதிக்கும். ஸ்ட்ரோக் எனும் பக்கவாதம் ஏற்படுவதற்கு முன் ஏற்படும் **Transient Ischemic Attacks** எனும் நிலையிலும் இப்படி தற்காலிக பார்வையிழப்பு ஏற்படலாம்.

இந்த பிரச்சனையை முதல் முறை உணர்ந்தாலே அந்த நபர்கள் உஷாராகி, உடனே கண் மருத்துவரை அணுக வேண்டும். அது தவிர முழு உடல் பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டும். ரத்த அழுத்தமும், ரத்தச் சர்க்கரையும் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா, இதயத்தின் செயல்திறன் சரியாக இருக்கிறதா என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

### பார்வை வெறும் உப்பு நீரல்ல கண்ணீர்...

குறிப்பாக, இதய ஆரோக்கியத்தை உறுதிசெய்ய டிரெட்மில் டெஸ்ட், இசிஜி, எக்கோ கார்டியோகிராபி போன்றவற்றைச் செய்து பார்க்க வேண்டும். ஏனெனில், இத்தகைய பாதிப்புகளின் விளைவாகக் கூட கண்களுக்குச் செல்லும் ரத்தக்குழாய்களில் திடீர் அடைப்பு ஏற்பட்டு, திடீரென பார்வை மங்குவதும் பிறகு தானாகச் சரியாவதும் நடக்கும்.

இலை தவிர, சில நேரங்களில் கண்களில் ஏற்படும் அதீத வறட்சியின் காரணமாகவும் தற்காலிக பார்வையிழப்பு ஏற்படலாம். கடந்த சில வருடங்களாக மாஸ்க் அணியும் பழக்கத்தைப் பின்பற்றுகிறோம். அதனால் **Mask-associated dry eye disease** எனும் பிரச்சனை ஏற்பட்டு கண்ணின் மேற்பரப்பு மற்றும் கண்ணீர் படலம் பாதிக்கப்பட்டு அதன் விளைவாகக் கண்களில் வறட்சி, எரிச்சல் மற்றும் தற்காலிக பார்வையிழப்பு போன்றவை ஏற்படலாம்.

அடுத்து மைக்ரேன் எனப்படும் ஒற்றைத் தலைவலியின் காரணமாகவும் சிலருக்கு இப்படி தற்காலிக பார்வையிழப்பு ஏற்படலாம். தவிர ஆப்தல்மோப்ளெஜிக் மைக்ரேன் **(Ophthalmoplegic migraine)** எனும் பிரச்சனையாலும் தற்காலிக பார்வையிழப்பு ஏற்படலாம். இந்த வகை மைக்ரேனில் தலைவலிதான் வரும் என்றில்லை. கண்களில் ஃபிளாஷ் அடிப்பது, பார்வையில் தடுமாற்றம் போன்ற தொந்தரவுகள் ஏற்படலாம்.

### தீர்வுகள்..?

வாழ்வியல் முறையில் மாற்றங்கள் அவசியம். காபி, டீ அளவை குறைக்க வேண்டும். ஸ்ட்ரெஸ் இல்லாத வாழ்க்கைக்குப் பழக வேண்டும். ஆழ்ந்த உறக்கம் மிக அவசியம். தற்காலிக பார்வையிழப்புக்கான லேசான அறிகுறியை உணர்ந்தாலே ஓய்வெடுக்க வேண்டும்.

மைக்ரேன் பாதிப்புள்ளவர்களுக்க அதற்கான அருமையான மருந்துகள் இன்று வந்துவிட்டன. மருத்துவ ஆலோசனையோடு அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

வருடம் ஒருமுறையாவது முழு உடல் பரிசோதனை செய்துபார்ப்பது அவசியம்.

**டெய்லிஹண்ட் செய்தி**

மாற்றுத்திறனாளிகள் நலச்சங்கம்

